


நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு அருணா முன்னிலையில், நடை பயணத்தினை கொடி அசைத்து துவக்கி வைத்து நடை பயணத்தில் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் செந்தரராஜன், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகாராஜ், துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் மரு.பாலுசாமி, உதகை நகர மன்றத்தலைவர் திருமதி வாணீஸ்வரி, துணை தலைவர் ரவிக்குமார், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், சுகாதாரத்துறை அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், நகராட்சித் துறை, வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் தன்னார்வலர்கள் உட்பட 500 பலர் கலந்து கொண்டனர்.




சென்னையில் நேற்று தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தமிழ்நாடு முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குதல் மற்றும் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களிடையே காணொலிக் காட்சி வாயிலாக விரிவான ஆய்வினை மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி அனைத்து இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் திட்டங்களைப் பின்பற்றும் மாநிலங்கள்

# முதல்வருக்குப் பெருமை சேர்க்கின்றன!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 5 -

தமிழ்நாட்டின் பல திட்டங்களை பல மாநிலங்கள் பின்பற்றி தமிழகத்துக்கு பெருமை சேர்த்து வருகின்றன என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

பொதுவாக என்ன பிரச்சினை என்றாலும், தமிழகத்தின் நிலைப்பாடு என்ன? என்றே அனைத்து மாநிலங்களும் உற்று நோக்குகின்றன. இது இன்று நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாகவே நடந்துவருகிறது. சத்துணவு திட்டம், இலவச சைக்கிள் வழங்கும் திட்டம், இலவச சீருடை திட்டம், இலவச லேப்டாப் வழங்கும் திட்டம் என்று மாணவர்களுக்கான பல திட்டங்கள் இன்று பல்வேறு நிலங்களில் செயல்படுத்தப்படுகின்றன என்றால், அது தமிழ்நாடு காட்டிய வழி தான். அந்த வரிசையில் இப்போது, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிந்தையில் உதித்த காலை உணவு திட்டமும் சேர்ந்துவிட்டது.




ஒரு நாள் சென்னையில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் ஆய்வு மேற்கொண்ட முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், சில மாணவிகள் சோர்வாக இருப்பதைப்பார்த்து, “ஏன் சோர்வாக இருக்கிறீர்கள். காலையில் சாப்பிட்டீர்களா?” என்று கேட்டபோது, சில மாணவிகள் “இல்லை” என்றும், சில மாணவிகள் “பள்ளிக்கூடத்தில் போடப்படும் மதிய உணவை சாப்பிட்டுவிடுவோம்” என்றும் பதில் அளித்தவுடன், மனம் கலங்கினார். அதன் விளைவாக, அரசு பள்ளிக்கூடங்களில் முதல் வகுப்பில் இருந்து 5வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு தினமும் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை கொண்டுவந்தார்.

இப்போது 31 ஆயிரத்து 8 பள்ளிக்கூடங்களில் படிக்கும் 17 லட்சம் மாணவ-மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்படுகிறது. இதற்காக பட்ஜெட்டில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த புரட்சிகரமான திட்டம் அனைத்து மாநிலங்களையும் வெகுவாக கவர்ந்தது. பல மாநிலங்கள் இந்த திட்டத்தின் செயல்பாடு குறித்து கேட்டறிந்தன. குறிப்பாக, தெலுங்கானா மாநில அரசு அதிகாரிகள் குழு இந்த திட்டத்தை ஆய்வு செய்ய, தமிழ்நாட்டுக்கு வந்து பல பள்ளிக்கூடங்களுக்கு சென்று பார்த்து, அவர்கள் அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்தனர்.

இதன் விளைவாக, தெலுங்கானா மாநிலத்திலும் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை முதல்மந்திரி சந்திரசேகரராவ் தொடங்கி வைத்தார். இதன்படி அந்த மாநிலத்தில் ரூ.400 கோடி செலவில் 28 ஆயிரம் அரசு பள்ளிக்கூடங்களில் இப்போது காலை உணவு வழங்கப்படுகிறது. 23 லட்சம் மாணவர்கள் இந்த திட்டத்தால் தினமும் காலை உணவை பள்ளிக்கூடத்துக்கு வந்து சாப்பிடுகிறார்கள். சிற்றுண்டி வகையை பொறுத்த மட்டில், தமிழ்நாட்டைப் போலவே தினமும் விதவிதமான உணவு வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில தினங்களில் தேர்தலை சந்திக்க இருக்கும் தெலுங்கானா மாநிலத்தில், இந்த திட்டம் ஆளும் கட்சிக்கு மிகப்பெரிய பலமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வித்துறையில் நிறைவேற்றப் பட்ட இந்த திட்டம்போல, மக்கள் நல்வாழ்வுத்துறையிலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இந்த திட்டங்களின் செயல்பாடுகளையும், தமிழ்நாட்டிலுள்ள மருத்துவ கட்டமைப்புகளையும் பார்வையிட குஜராத் மாநிலத்தில் இருந்து 60 மருத்துவத்துறை அலுவலர்கள் வந்திருந்தனர். அவர்கள் சென்னை, தாம்பரம், பூந்தமல்லி போன்ற பல இடங்களில் உள்ள பன்னோக்கு மருத்துவமனைகள், கலைஞர் நாற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நேரில் சென்று பார்த்து கேட்டறிந்தனர். தமிழ்நாட்டின் சிறந்த மருத்துவ கட்டமைப்புகளை அவர்கள் பாராட்டினர். மொத்தத்தில், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிக்கூட மாணவர்களுக்கான காலை உணவு திட்டம், மருத்துவ திட்டங்கள் பல மாநிலங்களுக்கு முன்னோடி திட்டங்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தமிழகத்துக்கு பெருமையும் சேர்த்து வருகின்றன.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல்!

# கடலூர் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர் நவ. 5 -

தமிழ்நாடு முதலமைச்சர்-கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவித்தலின் படி கடலூர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் வாக்காளர் பட்டியலை சரி பார்த்திடுவீர் என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை கீழ் வருமாறு:

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்கல் திருத்தல் முகாம் இன்று (5.11.2023 - ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 18.11.2023 சனிக்கிழமை 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

அது சமயம் கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதியில் உள்ளடக்கிய வாக்குச்சாவடி முகாம்களில் வாக்காளர் சேர்த்தல் திருத்தல் பெயர் மாற்றம் இட மாற்றம் நடைபெறும் முகாம்களில் மாவட்ட கழக நிர்வாகிகள், நகரக் கழக நிர்வாகிகள், உட்கிளை செயலாளர்கள், வட்ட பிரதிநிதிகள் BLA 2 வாக்குச்சாவடி நிலை முகவர்கள் இளைஞரணி நிர்வாகிகள் அனைவரும் அந்தந்த வாக்குச்சாவடி முகா மில் கலந்து கொண்டு வாக்காளர் சேர்த்தல், நீக்கல் திருத்தல், பணியில் கவனத்துடன் செயல்பட்டு சேர்த்திடுவீர் என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை தேவகி

### நவம்பர் 5 (2009)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம் வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் ‘அம்பேத்கர் விருது’ வழங்கி சிறப்பித்தார்.

“கழகம், கழகம் என்று தன் வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம் பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருவள்ளூரில் இன்று நாள் முழுவதும் நடைபெறும்

# பாக முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டத்தில் அனைவரும் பங்கேற்க வாரீர்!

## காஞ்சி வடக்கு மாவட்ட பாக முகவர்களுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

திருவள்ளூர், நவ.5-

திருவள்ளூரில் இன்று நாள் முழுவதும் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் பாக முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட அனைத்து பாக முகவர்களும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கேட்டுக் கொண்டுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

திருவள்ளூர் திருத்தணி நெடுஞ்சாலையில், திருவள்ளூரில், திருப்பாச்சூர் சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் திடலில் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் வாக்குசாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டம் இன்று (5ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை) காலை தொடங்கி மாலை வரை நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்களில் ஏற்கனவே மாவட்ட கழகம் மூலம் நியமனம் செய்யப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பாக முகவர்கள் அனைவரையும் அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் இன்று திரு வள்ளூரில் நடைபெறும் வாக்குசாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டத்திற்கு, வாகனங்கள் மூலம் காலை 8.30 மணிக்கெல்லாம் திருவள்ளூருக்கு அழைத்து சென்று பங்கேற்க செய்து கூட்டத்தை சிறப்பித்திட வேண்டும்.

இப்பயிற்சி பாசறை பாக முகவர்கள் கூட்டத்தில் மேடையின் எதிரே வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அனைவரும் அமர்வதற்காக 3 பகுதிகளாக பிரித்துள்ளனர்.

அதில், நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர், செங்கல்பட்டு, தாம்பரம், திருப்பெரும்புதூர், திருப்போரூர், பல்லாவரம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கிய பாக முகவர்கள் மேடையின் நடுப்பகுதியான 2வது பகுதியில் அமருவதற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திலிருந்து வாக்குச்சாவடி நிலை முகவர்கள் வரும் வாகனங்கள் அனைத்தும் நிகழ்ச்சி நடைபெறும் திடலுக்கு வலதுபுறத்தில் உள்ள மைதானத்தில் நிறுத்த உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை வாக்குச்சாவடி நிலை முகவர்கள் திறம்பட செய்வதற்காகவே இப்பயிற்சி பாசறை கூட்டத்தை சிறப்பான நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பாக முகவர்கள் கூட்டத்தில் பங்கேற்பது “நமது கடமை, நமது உரிமை” என்ற லட்சிய உணர்வோடு காஞ்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தொடங்கி வைத்தார்!

# திருவொற்றியூர் கிழக்கில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம்!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு - குறிஞ்சி கணேசன் பங்கேற்பு!

சென்னை, அக்.5-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதியில் நேற்று (4.11.2023) நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் முகாமில் புதிய வாக்காளர் சேர்த்தல் பணியினை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார்.

இதில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு, மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசைதம்பி, பகுதி துணை செயலாளர்கள் எம்.வி. குமார், ஆர்.எஸ்.சம்பத், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன்,

வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், டி.சி. வி.மணிகண்டன், எம்.எல். சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ். பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, ஆர்.ரஜினிபாபு, டி.டி.எம். பாபு, பி.எஸ்.சைலஸ், ம. ஜெயராமன், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், அ. அப்துல் சலிம், ப.சந்தானகிருஷ்னன், மற்றும் அணியின் நிர்வாகிகள், பாக முகவர்கள் உடன் இருந்தனர்.

### மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா தலைமை!

# சென்னை வடக்கு மாவட்ட நெசவாளர் அணிக் கூட்டம்!

## கார்த்திக் செங்குட்டுவன் அறிக்கை!

சென்னை, நவ.5,

சென்னை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கார்த்திக் செங்குட்டுவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

சென்னை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி ஆலோசனைக் கூட்டம் கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் வழிகாட்டுதலின் படியும், சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.இளைய அருணா ஆலோசனைபடியும் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கார்த்திக் செங்குட்டுவன் ஏற்பாட்டில் நாளை ( 06.11.2023 ஞாயிறு ) அன்று மாலை 6.00 மணியளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் எண்.1, வீராசாமி சந்து இராயபுரம், சென்னை13. இல் நடைபெறுகின்றது.

சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா. இளைய அருணா (தலைவர் பெருநகர் மாநகராட்சி நகர் அமைப்பு குழு) தலைமை வகிக்கிறார்.

ஆலோசனை கூட்டத்திற்கு சென்னை வடக்கு மாவட்ட நெசவாளரணி தலைவர் துணைத் தலைவர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அது போது நீட் தேர்வை எதிர்த்து கையெழுத்து இயக்கம்!

டிசம்பர் மாதம் சேலம் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் கழக இளைஞர் அணி மாநாடு மற்றும் கழக ஆக்கப்பணி. குறித்து ஆலோசிக்கப் படுகிறது.

இவ்வாறு கார்த்திக் செங்குட்டுவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதியில் நேற்று (4.11.2023) நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் முகாமில் புதிய வாக்காளர் சேர்த்தல் பணியினை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். இதில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு, மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி, பகுதி துணை செயலாளர்கள் எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன், வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, ஆர்.ரஜினிபாபு, டி.டி.எம்.பாபு, பி.எஸ்.சைலஸ், ம.ஜெயராமன், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், அ.அப்துல் சலிம், ப.சந்தானகிருஷ்னன், மற்றும் அணியின் நிர்வாகிகள், பாக முகவர்கள் உடன் இருந்தனர்.